ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1789/13 - 2012 දෙසැම්බර් මස 17 වැනි සඳුදා - 2012.12.17

*1789/13 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

*அறிவித்தல்*

**மதுபான வினாகிரித் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மதுபான வினாகிரித் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய தீர்மானங்களை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனை 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் நாளன்று நண்பகல் 12.00 மணிவரை சபையின் தவிசாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

*வி. பி. பி. கே. வீரசிங்க,*
*தலைவர்,*
*மதுபான வினாகிரித் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு ,*
*2012, ஒற்றோபர் 30.*

**அட்டவணை**

*மதுபான, வினாகிரித் தொழிலுக்கான சம்பளச் சபையினாலாக்கப்பட்டு 1946 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதிய 9560 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே கூறப்பட்டுள்ளனவும், காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டனவும் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம்*

கடைசியாக மாற்றப்பட்டனவுமான முடிபுகள் அட்டவணையின் II ஆம், III ஆம் பாகங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகங்களை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :-

## II ஆம் பாகம்

மதுபான, வினாகிரித் தொழிலின் பின்வரும் செய்முறைகளுக்குப் பொருத்தமான துண்டு வேலைக்குரிய கீழெல்லை சம்பள வீதங்கள் :-

| செய்கை முறைகள் | | சம்பள வீதங்கள் ரூ. ச. |
|---|---|---|
| தென்னை மரங்களைத் தொடுத்தல் | ஒவ்வொரு தரமும் தொடுக்க | 52.25 |
| கயிறுகளை மாற்றுதல் | ஒவ்வொரு தரமும் தொடுக்க | 25.25 |
| கயிறுகளை வெட்டுதலும் நீக்குதலும் | ஒவ்வொரு தரமும் தொடுக்க | 22.00 |
| மரங்களுக்கு சட்டம் கட்டுதல் | ஒவ்வொரு கயிறும் தொடுத்தல் 110 மரங்களுக்கு மேற்படாதவிடத்து (தோப்பு) | 2,625.00 |

### தவறணைகளுக்கு கள்ளு விநியோகிப்பதற்காக தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களைச் சீவுதல்

| | ரூ. ச. | |
|---|---|---|
| காலி மாவட்டத்தில் | 40.50 | தொழிலாளியினால் வழங்கப்படும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் |
| மேல் மாகாணத்தில் | 86.00 | |
| சிலாபம் மாவட்டத்தில் | 81.00 | |
| நுவரெலியா அல்லது கண்டி மாவட்டத்தில் | 90.00 | |
| மாத்தறை, யாழ்ப்பாணம் அல்லது மாத்தளை மாவட்டத்தில் | 81.00 | |
| புத்தளம், அநுராதபுரம், குருநாகல் அல்லது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் | 86.00 | |
| பதுளை அல்லது இரத்தினபுரி மாவட்டத்தில் | 90.00 | |
| மட்டக்களப்பு அல்லது மன்னார் மாவட்டத்தில் | 90.00 | |
| கேகாலை மாவட்டத்தில் | 60.00 | |
| திருகோணமலை அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் | 78.00 | |
| வடிசாலைக்கு அல்லது வினாகிரி தயாரிப்பதற்கு அல்லது கள்ளு விநியோகித்தற் பொருட்டு, தென்னை, கித்துல், பனை மரங்களைச் சீவுதல்- தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் | 18.50 | தொழிலாளியினால் வழங்கப்படும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் |
| வடிசாலைக்கு அல்லது வினாகிரி தயாரிப்பதற்கு அல்லது கள்ளு விநியோகிக்கும் பொருட்டு பூவைச் சீவுதல் - 100க்கு மேற்படாத மரங்களுக்கு | 2,400.00 | |
| 100க்கு மேற்பட்ட ஒவ்வொரு மரத்திற்கும் | 25.25 | |
| தவறணைகளுக்கு கள்ளு விநியோகிப்பதற்காகப் பூவைச் சீவுதல் 25 முதல் 40 வரையுள்ள தென்னை, கித்துல், பனை மரங்களுக்கு | 2,290.00 | |

தம்மாற் கொடுக்கப்படும் கள்ளு (கன வீதம்) நூற்றுக்கு 7.5 % ற்குக் குறையாத மதுசாரம் சத்துக் கொண்டதாய் இருத்தல் வேண்டுமென்ற நிபந்தனைகளுக்கமையவே சாராயத் தொழிலுக்கு அல்லது வினாகிரி தயாரிப்பதற்கு கள்ளு சேகரிப்பதற்காக அமர்த்துப்பட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் தென்னை, கித்துல் அல்லது பனைமரங்கள் சீவுவதற்கென மேலே கூறிய வீதங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவ்வகைக் கள்ளிலுள்ள மதுசாரம் (கனவீதம்) நூற்றுக்கு 7.5 வீதத்திற்குக் குறைய இருந்தால் அவ்வகைக் கள்ளிலுள்ள மதுசாரம் வீதத்திற்கும் 7.5 ற்கும் என்ன தகவுப் பொருத்தம் இருக்கிறதோ அதே தகவுப் பொருத்தம் அக்கள்ளினைச் சேகரித்த தொழிலாருக்கு கொடுபடும் பணம் மேற்குறிப்பிட்ட வீதத்தில் இருத்தல் வேண்டும்.

## III ஆம் பாகம்

நிரல் I இல் குறிக்கப்பட்ட தொழிலாளர் வகுப்பிற்கு நேர வேலைக்கு இயைபுடைய கீழெல்லைச் சம்பள வீதங்கள் அவ்வவ் தொழிலாளர் வகுப்பிற்கு நேரே II ஆம் நிரலில் குறிக்கப்பட்ட வீதங்களாயிருத்தல் வேண்டும்.

எம் மாதத்திலேனும் தொழிலாளி ஒருவர் அனுமதியின்றி நான்கு (4) நாட்களுக்கு மேற்பட்ட நாட்களுக்கு வராதவிடத்து அனுமதிக்கப்பட்ட நான்கு நாட்களை விஞ்சுகின்ற நாட்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கமைவாக ஒரு தொகையை மாதச் சம்பளத்திலிருந்து கழிவு செய்தபின் மிகுதிச் சம்பளம் கொடுக்கப்படல் வேண்டும்.

| நிரல் I<br>தொழிலாளர் வகுப்பு | நிரல் II<br>மாத வீதம்<br>ரூ. ச. |
|---|---|
| **பின்வரும் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் :** | |
| தோப்புக் கண்காணியின் வேலை | 11,420.00 |
| கள்ளுத் தவறணைக் காவலாளியின் வேலை | 9,720.00 |
| சாராயத் தவறணைக் காவலாளியின் வேலை | 9,720.00 |
| தோப்புக் காவலாளியின் வேலை | 9,315.00 |
| சேகரிக்கும் நிலைய முகாமையாளர் வேலை | 10,450.00 |
| தவறணைகளில் கள்ளு விற்கும் வேலை | 10,285.00 |
| தவறணைகளில் சாராயம் விற்கும் வேலை | 10,285.00 |
| தொழிலின் கள்ளுப் பிரிவில் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேகரித்தல் (கள்ளுக் கொண்டு போதல், ஏற்றுதல் இறக்குதல், பீப்பாக்கள், கள்ளுச்சாடிகள், உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கழுவுதல் ஆகிய வேலைகள் உட்பட) | 10,450.00 |
| தொழிலின் வினாகிரிப் பிரிவில் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேகரித்தல் (ஏற்றிச் செல்லல் உட்பட) | 9,400.00 |
| வடிசாலையில் கள்ளைக் காய்ச்சி வடித்தல் | 9,770.00 |
| போத்தல்களில் சாராயம் விடுதலும் அடைத்தலும், நாமவிலாசம் ஒட்டுதலும் | 9,315.00 |
| விறகு வெட்டுதலும் பிளத்தலும், வடிசாலையில் பீப்பாக்கள், கழுவும் பாத்திரங்கள், வடிபாத் திரங்கள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்தலும் கழுவுதலும், சாராயப் போத்தல் ஏற்றுதலும் இறக்குதலும் சாராயம் அளத்தல், போத்தலில் கள்ளு விடுதலும், அடைத்தலும், வினாகிரி தயாரித்தல், போத்தலில் வினாகிரி விடுதலும் அடைத்தலும் நாமவிலாசம் ஒட்டுதலும், வினாகிரியை விநியோகிப்பதற்காக ஏற்றிச் செல்லுதல் | 9,315.00 |
| **தொழிலின் சாராயப் பிரிவில் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேகரித்தல் (ஏற்றிச் செல்லும் வேலை உட்பட):** | |
| 80க்கு மேற்படாத மரங்களுக்கு | 9,640.00 |
| 81க்கு குறையாதனவும் 90க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 9,775.00 |
| 91க்கு குறையாதனவும் 100க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 9,910.00 |
| 101க்கு குறையாதனவும் 110க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 10,045.00 |
| 111க்கு குறையாதனவும் 120க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 10,180.00 |
| 121க்கு குறையாதனவும் 130க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | 10,315.00 |
| 131க்கு குறையாத மரங்களுக்கு | 10,450.00 |

1- 41

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.